## ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2013

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இல. 7 இன் பிரகாரம் ஆதனம் பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காகப் பெறுமானத்தேய்விடப்படுகையில், சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதற்காக ஏற்ற நிலைக்குக் கொண்டுவரப்பட்ட நாள்முதல் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தால் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் பெறுமானத்தேய்விடப்படாது சொத்துக்கள் அகற்றப்பட்ட ஆண்டின் போது முழு ஆண்டிற்கும் பெறுமானத்தேய்விடப்படும் கொள்கையாக பின்பற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு ஏற்பாடு ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட சொத்திற்காக ரூபா 45,919 குறைத்துக் கணக்கிடப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 40(5) ஆம் பிரிவு | முகாமைத்துவ சபை அங்கத்தவர் ஒருவர் 03 கூட்டத் தவணைகளுக்கு தொடர்ந்து கலந்து கொள்ளாவிடில் வேறு அங்கத்தவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது தொடர்ந்து 08 கூட்டத்தொடர்களுக்கு வருகைதராத உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக வேறு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. |
| (ஆ) | பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவகத்திற்கான தாபன விதிக் கோவையின் XX | பல்கலைக்கழக சேவையில் ஈடுபடும் சகலரும் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதியப்பட வேண்டிய போதிலும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகம், 2013 ஆம் ஆண்டிற்காக கல்விசார் |

| | | |
|---|---|---|
| | ஆம் அத்தியாயத்தின் 3:1 ஆம் பிரிவு | உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படிப்பணமாக ரூபா 4,735,312 தொகையைச் செலுத்தியிருந்த போதிலும் அக் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்கான வருகைப் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2005 இன் 4 ஆம் இலக்க ஆங்கிலப் பட்டப் பின்படிப்பு நிறுவகக் கட்டளைச் சட்டத்தின் 4 (இ) மற்றும் (உ) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட குறுகிய கால பாடநெறிகளிற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 3,413,496 தொகையான மிகையானதுடன் இதனோடொத்த முன்னை ஆண்டின் மிகை ரூபா 2,081,211 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,332,285 தொகையான அதிகரிப்பு காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 26,000 ஆல் குறைவடைந்திருந்தது. மேலும் 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான 04 ஆண்டுகளின் போது பட்டப் பின்படிப்புத் தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 18 ஆகக் காணப்பட்டது.

(ஆ) இரண்டாம் மொழியாக ஆங்கில இலக்கணத்தைக் கற்பிக்கும் பட்டப் பின்படிப்புப் பாடநெறிக்காக (Teaching English Literature in the Second Language Context) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் மீளாய்வாண்டின் ஆகஸ்ட் மாதம் பெறப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி (2014 ஏப்ரல் 03) வரையிலும் பாடநெறி தயாரிப்பது தொடர்பான நடவடிக்கைகள், கற்கை உதவி தயாரிப்பு மற்றும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளை வழங்குவது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

நிதி நடவடிக்கைகள் கலந்துரையாடப்பட்டு அங்கீகாரம் பெறப்படுவதற்காக நிதிக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. நிதித்துறை தொடர்பாக நிபுணத்துவம் பெற்ற ஒரு உத்தியோகத்தரை மாத்திரம் கொண்ட முகாமைத்துவக் கூட்டங்களின் போது உரிய நிதி நெருக்கடிகள் கலந்தரையாடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

**4.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

2013 ஆம் ஆண்டின் போது இயந்திரம், தளபாடம் மற்றும் காரியாலய உபகரணங்கள் மற்றும் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 4,401,000 தொகையான ஏற்பாடு பெறப்பட்டிருந்ததுடன் அவ் ஏற்பாடுகளில் மீளாய்வாண்டின் போது ரூபா 1,253,413 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. இதன் படி, தேவைப்பாடு இனங்காணப்படாது மிகை ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தமையால் 2013 ஆம் ஆண்டின் போது அவ் ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டில் ரூபா 3,225,092 தொகை செலவிடப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டிற்கான உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் நிறுவக நடவடிக்கைகளில் 60 சதவீதம் பரீட்சிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக 02 ஐய வினாக்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

உள்ளபடியான வருமானம், பாதிடப்பட்ட வருமானத்தில் 244 சதவீதத்தை விஞ்சியிருந்ததுடன் உள்ளபடியான மீண்டெழும் செலவினம் பாதிடப்பட்ட மீண்டெழும் செலவினத்தைப் பார்க்கிலும் 98 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. ஆதலால் பாதீடானது ஆக்கபூர்வமான நிதி மற்றும் முகாமைத்துவ கட்டுப்பாட்டிற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.3 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

நிறுவகத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) பதவியணி முகாமைத்துவம்
(இ) கல்விசார் நடவடிக்கை முகாமைத்துவம்